# நியதிச்சட்டப் பிரகடனம்

அதிகாரமளிக்கப்பட்ட ஒருவர் முன்னிலையில் இந்தப் பிரகடனம் செய்யப்படவேண்டும். பொதுநலவாய நியதிச்சட்டப் பிரகடனத்திற்கு, குறிப்பிட்ட ஆட்கள் மாத்திரமே சாட்சிக்காரர் ஆகலாம். நியதிச்சட்ட பிரகடன ஒழுங்குவிதிகள் 2018, அட்டவணை 2 இல் சாட்சிக்காரராகக்கூடிய ஆட்களின் பெயர் பட்டியல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. https://www.legislation.gov.au. இல் ஓர் இணைப்பு ஊடாக இந்த ஒழுங்கு விதிகளையும் மற்றும் 'கையொப்பமிடச் சம்மதம் தெரிவித்தோரின் அட்டவணை' யொன்றினையும் வேறாகக் காணமுடியும்.

**எச்சரிக்கை:** நீங்கள் ஒரு நியதிச்சட்டப் பிரகடனத்தைச் செய்யும்போது, அதிலுள்ள கூற்றுக்கள் உண்மையானவையென நீங்கள் வெளியிடுகிறீர்கள். ஒரு நியதிச்சட்டப் பிரகடனத்தில் நீங்கள் வேண்டுமென்றே ஒரு பொய்யான கூற்றை மேற்கொண்டால், அந்தச் சட்டவிரோதச் செயலுக்காக உங்கள் மீது குற்றம் சாட்டப்படலாம், மற்றும் குற்றவாளியாகக் காணப்பட்டால், உங்கள்மீது அபராதம் அல்லது சிறைவாசம், அல்லது இரண்டுமே விதிக்கப்படலாம்.

*நியதிச்சட்டப்பிரகடன சட்டம் 1959* மற்றும் *புலம்பெயர் சட்டம் 1958* இன்கீழ், இந்தப் பிரகடனத்தில் பொய் அல்லது பிழையாக இட்டுச்செல்லக்கூடிய தகவல்களுக்குத் தண்டனை வழங்கும் ஏற்பாடுகள் உண்டு. தண்டனையாக 4 ஆண்டுகள் வரையான சிறைத்தண்டனைக்கு இந்த *நியதிச்சட்ட பிரகடன சட்டம்* ஏற்பாடு செய்கிறது. ஒரு வீசா விண்ணப்பம் தொடர்பாகத் தெரிந்துகொண்டே ஒரு பொய்யான கூற்றைச் செய்வதற்கு 10 ஆண்டுகள் வரையான சிறைத் தண்டனையை *புலம்பெயர் சட்டத்தின்* 234ம் பிரிவு குறிப்பிடுகிறது.

## ஆஸ்திரேலிய பொதுநலவாயம்

### நியதிச்சட்டப் பிரகடனம்

---

---

ஆகிய நான்,[1] பயபக்தியுடனும், உண்மையாகவும் பிரகடனம் செய்வது :

(1) எந்தவொரு நாட்டிலாவது ஒரு குற்றம் அல்லது குற்றச்செயலுக்காக நான் தண்டிக்கப்பட்டிருக்கவில்லை.

(2) நான் எந்தவொரு குற்றத்திற்காகவும் குற்றம்சாட்டப்படவில்லை; சார்த்தப்படக்கூடிய குற்றசாட்டுதல் முடிவடையாமலோ அல்லது சட்ட நடவடிக்கையை எதிர்பார்தோ இருக்கவும் இல்லை. அவ்வாறான சாட்டுதல்களுக்கு இட்டுச்செல்லக்கூடியளவுக்கு எனது நடவடிக்கைகள் குறித்து எந்தவொரு விசாரணைகளும் மேற்கொள்ளப்படுவதாக நான் அறியவுமில்லை.

---

[1] பிரகடனம் செய்பவரின் பெயர், விலாசம் மற்றும் தொழிலை இங்கே குறிப்பிடவும்.

(3) குடும்ப அல்லது வசிப்பிட வன்செயல் குற்றம் அல்லது இதுபோன்ற குற்றம் ஒன்றிற்காக நான் ஒருபோதும் குற்றம் சாட்டப்பட்டிருக்கவில்லை.

(4) இன்னொருவரின் தனிப்பட்ட பாதுகாப்புக்காக, நியாயமன்று அல்லது நீதிமன்று அல்லது அதைப்போன்ற வேறேதாவது ஆட்சிபீட வீட்டு வன்செயல் கட்டளைக்கு அல்லது வேறெந்தவொரு கட்டளைக்கு நான் ஆட்படவில்லை.

(5) எனது பொலிஸ் அறிக்கையில், **spent convictions** சட்டமூலத்தின்கீழ் எந்தவொரு நாட்டிலோ அல்லது குற்றச்சாட்டிலோ **spent convictions** எனக்கு இல்லை.

(6) கிடைக்கப்பெற்ற சான்றுகளின் அடிப்படையில் நான் ஒரு குற்றச்செயலைச் செய்துவிட்டதாக நீதிமன்று கண்டறிந்தாலும், என்னை அந்தக் குற்றம் தொடர்பாக நான் குற்றத்தை ஒப்புக்கொள்ளத் தகுதியற்றவராக நீதிமன்று என்னைக் கருதவுமில்லை; அல்லது சித்தசுவாதீனமற்றவர் அல்லது மனநோய் காரணமாக அந்தக் குற்றச்சாட்டிலிருந்து நான் விடுவிக்கப்படவுமில்லை.

(7) ஒரு சிறுவர் சம்பந்தப்பட்ட பாலியல் அடிப்படையிலான குற்றத்திற்கு என்னைக் குற்றவாளியாகக் காணப்படவோ அல்லது எனக்கு எதிராக அவ்வாறான குற்றச்செயல் நிரூபிக்கப்படவோ இல்லை.

(8) புலம்பெயர் சட்டம் 1958 (ஆள் கடத்தல்) இன் 233A இலிருந்து 234A வரையில் ஒன்றோ அல்லது அதற்கும் மேற்பட்ட பிரிவுகளின் கீழ் உள்ளடக்கக்கூடிய நடத்தையிலோ அல்லது ஆள்கடத்தல் வியாபாரத்திலோ நான் சம்பந்தப்பட்டிருக்கவில்லை.

(9) இனப்படுகொலைக் குற்றம், மனித இனத்திற்கெதிரான குற்றம், போர்க்குற்றம், சித்திரவதை அல்லது அடிமைத்தனம்,அல்லது மற்றபடி சர்வதேசம் கவலைகொள்ளக்கூடிய பாரதூரமான குற்றத்தை

உள்ளடக்கக்கூடிய நடத்தையில் நான் ஈடுபட்டிருக்கவுமில்லை, என்மீது அதற்காகக் குற்றம் சுமத்தப்படவுமில்லை.

(10) குற்ற நடவடிக்கை அல்லது மேலே குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளில் ஏதேனும் ஒன்றில் ஈடுபாடுகொண்டிருக்கும் ஒரு குழுவிலோ அல்லது நிறுவனத்திலோ நான் ஒர் அங்கத்தவராக இப்போதும் இல்லை, முன்னர் ஒருபோதும் இருந்திருக்கவுமில்லை.

(11) குற்றச்செயல் அல்லது மேலே குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளில் ஏதேனும் ஒன்றில் ஈடுபாடுகொண்டுள்ள ஒரு குழு, நிறுவனம் அல்லது ஒருவருடன் எனக்குத்தொடர்பில்லை முன்னர் ஒருபோதும் தொடர்பு இருந்திருக்கவில்லை.

(12) எனது உன்னத அறிவுக்கு எட்டியவரை, புலம்பெயர் சட்டம் 1958 இன் பிரிவு 501இல் வரையறுக்கப்பட்டவாறு நான் நற்சான்று பரிசோதனையில்[2] சித்தி பெறுவதா, இல்லையா என்பது கேள்விக்கு உட்படுத்தப்படும்போது தீர்க்கப்படாத விடயங்களில் நான் இருந்ததாகவோ அல்லது நான் அதில் ஈடுபட்டுள்ளதாகவோ எந்தவொரு விடயமும் எனக்கு இல்லை.

நான் மேலே உள்ளவற்றை முற்றாக விளங்கிக்கொள்ளுகிறேன்; அல்லது மேலுள்ளவற்றை நான் நன்கு புரிந்துகொள்ளும் வகையில் மேலுள்ளவற்றை முற்றாக விளங்கிக்கொண்ட இன்னொருவரால் அல்லது உரைபெயர்ப்பாளரால் முழுவதையும் நான் புரியும்படி எனக்குச் சொல்லப்பட்டது. *நியதிச்சட்டப் பிரகடன சட்டமூலம் 1959* க்கு அமைவாகவும், நியதிச் சட்டப் பிரகடனத்தில் பொய்யான கூற்றுக்களைச் செய்வதனால் வரக்கூடிய தண்டனைக்கு ஆட்படுவதனை அறிந்துகொண்டும், மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டு இந்தப் பிரகடனத்தில் அடங்கியிருக்கும் கூற்றுக்களின் ஒவ்வொரு தனியான விபரமும் உண்மையாகுமென பயபக்தியுடன் இந்த உறுதிமொழியைச் செய்கிறேன்.

---

[2] புலம்பெயர் சட்டம் 1958 இன் பிரிவு 501 இல் *நற்சான்று பரிசோதனை* வரையறுக்கப்பட்டுள்ளது.

***ஏதேனும் ஒரு தவறான தகவல் எனது விண்ணப்பம் மறுக்கப்படுவதை அல்லது ஒரு விசா வழங்கப்பட்டிருந்தால், அந்த விசா இரத்துச்செய்யப்படுவதை விளைவிக்கக்கூடும் என்பதை நான் அறிவேன். ஆஸ்திரேலியாவுக்குள் நுழைந்ததும் எனதுவிசா இரத்துச் செய்யப்பட்டால், ஆஸ்திரேலியாவைவிட்டு வெளியேறுமாறு நான் வேண்டடப்படுவேனென்பதை நான் அறிவேன்.***

(3) ____________________________________________________________

________/_________/ 2020

**எனது முகதாவில்,**

_______________________________________

**இல் வெளிப்படுத்தப்பட்டது.**

([3])

_____________________________________________________________________________________

([4])

[3] எவரின் முன்னிலையில் இந்த வெளியீடு செய்யப்பட்டதோ அவரின் கையொப்பம்

[4] இந்த வெளியீடு  எவரின் முன்னிலையில் செய்யப்பட்டதோ அவரின் பெயரை இங்கே குறிப்பிடவும்.

***நன்நடத்தைப் பரிசோதனை***

(6) இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, ஒருவர் கீழே காணப்படுவனவற்றில் தொடர்புகொண்டிருந்தால் நன்நடத்தைச் சோதனையில் சித்தியடையமாட்டார் : (a) திடமான குற்றப் பதிவு இருந்தால் ( பிரிவு (7) இல் வரையறை செய்யப்பட்டுள்ளதுபோல்); அல்லது (aa)செய்த குற்றத்திற்காக குற்றவாளியானால்:

(i) அந்த நபர் குடிவரவு தடுப்பில் இருக்கும்போது; அல்லது

(ii) அந்த நபர் குடிவரவுத் தடுப்பிலிருந்து தப்பிச்செல்லும்போது; அல்லது

(iii) அந்த நபர் குடிவரவு தடுப்பிலிருந்து தப்பிச்சென்றபின்னர் ஆனால் மீண்டும் அந்த நபர் குடிவரவு தடுப்புக்கு மீண்டும் கொண்டுவர முன்னர்: அல்லது

(ab) பிரிவு 197 ஏ க்கு எதிரான ஒரு குற்றத்திற்கு அந்த நபர் குற்றவாளியாகக் காணப்பட்டால்; அல்லது(b) அமைச்சர் நியாயமாகச் சந்தேகித்தால்:

(i) அந்த நபர் முன்னர் அல்லது தற்போது ஒரு குழு அல்லது நிறுவனதின் அங்கத்தவர், அல்லது ஒரு குழு, நிறுவனம் அல்லது நபருடன் முன்னர் இருந்துள்ளார் அல்லது தற்போது கூட்டாக இருக்கிறாரெனில்; அத்துடன்

(ii) அந்தக் குழு, நிறுவனம் அல்லது நபர் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார் அல்லது இப்பொழுது ஈடுபடுகிறார்; அல்லது

(ba) பின்வருவனவற்றில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ உருவாக்கக்கூடிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளாரென அமைச்சர் நியாயமாகச் சந்தேகித்தால்:

(i) 233A இலிருந்து 234A (ஆள் கடத்தல்) வரை உள்ள பிரிவுகளில் ஒன்றின்கீழோ , பலவற்றின் கீழோ ஒரு குற்றமாகும்.

(ii) ஆள் கடத்தல் வியாபாரம் குற்றம்

(iii) இனப்படுகொலைக் குற்றம், மனித இனத்திற்கெதிரான குற்றம், போர்க்குற்றம், சித்திரவதையுடனான குற்றம் அல்லது அடிமைத்தனம்,அல்லது மற்றபடி சர்வதேசம் கவலைகொள்ளக்கூடிய பாரதூரமான குற்றம்; ஒருவர் அல்லது இன்னொருவர் குற்றம் சாட்டப்பட்டுள்ளாரோ இல்லையோ ஒருவரின் நடத்தையால் உருவான குற்றம்; அல்லது

(c) பின்வரும் ஒன்று அல்லது இரண்டுமே தொடர்புள்ளதாக இருப்பின்:

(i) அந்த நபருடைய கடந்தகால அல்லது நிகழ்கால குற்ற நடத்தை;

(ii) அந்த நபரின் கடந்தகால அல்லது நிகழ்கால பொதுவான நடத்தை; அந்த நபர் நல்ல நடத்தை கொண்டவரல்ல.

(d) ஆஸ்திரேலியாவுக்குள் நுழைவதற்கோ அல்லது தங்குவதற்கோ அனுமதிக்கப்பட்டால், அவர் பின்வருவன தொடர்பில் ஆபத்தானவராவார்:

(i) ஆஸ்திரேலியாவில் குற்ற நடவடிக்கையில் ஈடுபடுவார்; அல்லது

(ii) ஆஸ்திரேலியாவில் அவர் தொந்தரவு, மானபங்கம், அச்சுறுத்தல் செய்வதுடன் அல்லது தீயஎண்ணத்துடன் ஏனையோரைப் பின்தொடருவார்; அல்லது

(iii) ஆஸ்திரேலிய சமூகத்தின் ஒரு பகுதியினரை இழிவு படுத்துவார்; அல்லது

(iv) ஆஸ்திரேலிய சமூகத்தினரிடையில் அல்லது சமூகத்தின் ஒரு பிரிவினரிடையில் அமைதியின்மையைத் தூண்டுவார்; அல்லது

(v) ஆஸ்திரேலிய சமுதாயத்திற்கு அல்லது சமூகத்தின் ஒரு பிரிவினருக்குத் தீங்கை விழைவிக்கக்கூடிய நடவடிக்கைகளைச் செய்வார், அல்லது அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குப் பொறுப்பாக இருந்து வன்செயல், குழப்பம், ஆபத்தைக் கொண்டுவருவார் அல்லது வேறேதாவது வழியில் அந்த சமூகம் அல்லது பிரிவினருக்கு குழப்பம், தீங்குஇழைக்கப்போவதாக அச்சுறுத்தி ஆபத்தைக் கொண்டுவருவார்; அல்லது

(e) ஆஸ்திரேலியாவில் அல்லது வெளிநாட்டு நீதிமன்றால்:

(i) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சிறுவர் சம்பத்தப்பட்ட பாலியல் அடிப்படையிலான குற்றங்களுக்குக் குற்றவாளியாகக் குற்றம்சாட்டப்பட்ட ஆள்; அல்லது

(ii) ஒருவர் குற்றம் சாட்டப்படாமல் விடுவிக்கப்பட்டாலும், அவ்வாறான குற்றத்திற்குக் குற்றவாளியென நிரூபிக்கப்பட்ட ஒருவர் அல்லது அவ்வாறான குற்றத்திற்காக அந்த நபருக்கு எதிராகக் குற்றம் காணப்பட்டிருந்தால்; அல்லது

(f) அந்த நபர் ஆஸ்திரேலியாவில் அல்லது வெளிநாட்டில், பின்வரும் குற்றச்சாட்டுகளில் ஒன்று அல்லது அதற்கும் கூடுதலானவற்றிற்குக் குற்றம் சாட்டப்பட்டவர் அல்லது குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர்:

(i) இனப்படுகொலைக் குற்றம்;
(ii) மனித இனத்திற்கு எதிரான குற்றம்;
(iii) யுத்தக் குற்றம்;
(iv) சித்திரவதை அல்லது அடிமைத்தனம் அடங்கிய குற்றம்;
(v) வேறுவகையில், பாரதூரமான சர்வதேச கரிசனைக்குரிய ஒரு குற்றம்;

(g) பாதுகாப்புக்கு நேரடியாக அல்லது மறைமுகமாக ஆபத்தாக இருப்பதாக ஆஸ்திரேலிய பாதுகாப்பு புலனாய்வு அமைப்பால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள அந்த நபர் ( *ஆஸ்திரேலிய பாதுகாப்பு புலனாய்வு நிறுவன சட்டம் 1979* இன் பிரிவு 4 இல் அர்த்தம் கூறப்பட்டவாறு); அல்லது

(h) ஒருவருக்கு ‘இண்டர்போல்’ அறிவித்தல் நடைமுறையில் இருக்கும் காரணமாக ஆஸ்திரேலிய சமுதாயம் அல்லது சமுதாயத்தின் ஒரு பிரிவுக்கு அந்த நபர் ஆபத்தை விழைவிப்பாரெனக் கருதுவது நியாயமாகும்.

மற்றபடி, அந்த ஆள் *நடத்தைப்பரீட்சையில்* சித்தியடைவார்.

*போதியளவு குற்றப் பதிவு*

(7) நடத்தைப் பரிசோதனை நோக்கங்களுக்காக, பின்வருவன இருக்குமானால் ஒருவருக்கு *போதியளவு குற்றச்சாட்டு*களைக் கொண்டுள்ளார் என்பதாகும்:

(a) மரணதண்டனை பெற்ற ஒருவர்; அல்லது

(b) ஆயுள்காலச் சிறைத்தண்டனை பெற்ற ஒருவர்; அல்லது

(c) தண்டனையாக 12 மாதங்கள் அல்லது அதற்கும் கூடிய காலத்திற்கு சிறைத்தண்டனை பெற்ற ஒருவர்; அல்லது

(d) 2 அல்லது அதற்கும் மேற்பட்ட கால அளவுக்குச் சிறைத்தண்டனை பெற்று அந்த இரண்டும் மொத்தமாக 12 மாதங்கள் அல்லது அதற்கும் கூடிய காலத் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர்; அல்லது

(e) ஒரு குற்றத்திலிருந்து ஒருவர் முற்றாக விடுவிக்கப்பட்டதற்குக் காரணம் அவரின் மனநிலைக் கோளாறு அல்லது மனநோய் என்பதுடன், அதன் காரணமாக அந்த நபர் ஒரு தங்குமிடவசதி அல்லது நிறுவனத்தில் தடுத்து வைக்கப்பட்டிருத்தல்; அல்லது

(f) அந்த நபர்:

(i) ஒரு குற்றச்சாட்டுத் தொடர்பில் வாதாடுவதற்குப் பொருத்தமற்றவரென நீதிமன்று காணுமிடத்து; மற்றும்

(ii) இருந்தபோதிலும், அந்த நபர் அக்குற்றத்தைச் செய்துள்ளாரென கிடைக்கப்பெறும் சான்றுகளிலிருந்து நீதிமன்று காணுமிடத்து; மற்றும்

(iii) அதன் காரணமாக, அந்த நபர் ஒரு இடவசதியில் அல்லது நிறுவனத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளாரெனில்.

*ஒரே நேரத்தில் உடன் நிகழும் தண்டனைத்தீர்ப்பு*

(7A) நன்நடத்தைச் சோதனையின் நோக்கங்களுக்காக, ஒரே நேரத்தில் சிறைத்தண்டனையை அனுபவிக்கக்கூடிய வகையில் ஒருவருக்கு 2 அல்லது அதற்கு மேற்பட்ட தண்டனைக்கால தீர்ப்பு

வழங்கப்பட்டிருந்தால் (முழுவதும் அல்லது ஒரு பகுதி) ஒவ்வொரு தவணையின் முழுவதும், மொத்தக் காலத்திலிருந்து கணக்கிடப்படும்.

*உதாரணம்*: ஒருவருக்கு ஒரே நேரத்தில் அனுபவிக்கக்கூடியதாக 2 குற்றங்களுக்கு 3 மாத சிறைத்தண்டனையை 2 அடுத்துஅடுத்துவரும் குறிப்பிட்ட காலத்தை ஒரே நேரத்தில் அனுபவிக்கலாம். நன்நடத்தைப் பரிசோதனை நோக்கங்களுக்காக, மொத்தமான காலப்பகுதி 6 மாதங்களாகும்.

*தவணைமுறை தடுப்பு*

(8) நன்னடத்தை பரிசோதனையின் நோக்கங்களுக்காக, ஒருவரின் குற்றச்செயலுக்காக அவரைத் தவணைமுறையில் தடுத்துவைக்கும் தீர்ப்பு வழங்கப்பட்டால், தடுப்பில் கழிப்பதற்கு அந்தத்தீர்ப்பில் கோரப்பட்ட நாட்களின் எண்ணிக்கைக்குச் சமனாக அந்த நபரின் சிறைத்தண்டனைக் காலம் எடுக்கப்படும்

***வதிவிடத் திட்டம் அல்லது நிகழ்ச்சி நிரல்***

(9) நன்னடத்தைச் சோதனையின் நோக்கங்களுக்காக ஒரு குற்றத்திற்கு ஒருவர் தண்டிக்கப்பட்டு, பின்வருவனவற்றில் பங்குகொள்ளுமாறு நீதிமன்றம் கட்டளையிட்டால்:

(a) வதிவிட போதைவஸ்து புனர்வாழ்வுத் திட்டம்; அல்லது

(b) மனநோய்க்கான வதிவிட நிகழ்ச்சிநிரல்;
அந்தத் திட்டத்தில் அல்லது நிகழ்ச்சி நிரலில் பங்குபற்றுவதற்கு கேட்கப்பட்டிருக்கும் நாட்களின் எண்ணிக்கைக்குச் சமனான காலத்திற்கு அந்தநபர் தண்டனைத்தீர்ப்பு பெற்றுள்ளதாக கணிப்பிடப்படும்.

*தண்டனைக் குறைப்பு(மன்னிப்பு) போன்றவை.*

(10) நன்நடத்தைச் சோதனையின் நோக்கங்களுக்காக, ஒருவர்மீது விதிக்கப்பட்ட தண்டனை பின்வரும் சந்தர்ப்பத்தில் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது:

(a) கொடுக்கவேண்டிய தண்டனைத் தீர்ப்பு செல்லுபடியற்றதாக்கப்பட்டால் அல்லது வேறுவகையில் தள்ளுபடி செய்யப்பட்டால்; அல்லது

(b) இரண்டும்:

(i) சம்பந்தப்பட்ட தண்டனைத்தீர்ப்பு தொடர்பில் அந்த நபர் தண்டனைக்குறைப்பு செய்யப்பட்டுள்ளார்; மற்றும்

(ii) அந்தக் குற்றம் குறித்து அந்த நபர் ஒருகாலமுமே குற்றம்சாட்டப்பட்டிருக்கவில்லையென எடுத்துக்கொள்வதுதான் தண்டனைக்குறைப்பின் விழைவாகும்.

*தொந்தரவு அல்லது இடையூறாகக்கூடிய நடத்தை*

(11) நன்னடத்தைச் சோதனையின் நோக்கங்களுக்காக, கீழ் உள்ளவை ஒரு நபரின் தொந்தரவு அல்லது இடையூறாகக்கூடிய நடத்தையாகும்; எப்போதெனில் :

(a) அந்த நபருக்கு, வன்செயல் அல்லது வன்செயலுக்கான பயமுறுத்தல் அதில் அடங்காது விட்டாலும் கூட; அல்லது

(b) அந்த நபருக்குச் சொந்தமான, அவரின் உடமையில் இருக்கும் அல்லது அவரால் பாவிக்கப்பட்ட

ஆதனத்திற்கு சேதம் அல்லது பயமுறுத்தப்பட்ட
சேதத்தை உள்ளடக்காது விட்டாலும்கூட.

*வரைவிலக்கணம்*

(12) இந்தப் பிரிவில்: நீதிமன்றம் என்பது, இராணுவ நீதிமன்றம் அல்லது அதையொத்த படையினருக்குரிய நியாயசபை ஆகியவற்றை உள்ளடக்கும்.

*சிறைத்தண்டனை* என்பது எந்த வடிவத்திலாயினும் தண்டனை வழங்குவதற்கான ஒரு நிலையம் அல்லது வதிவிடவசதியில் தடுத்து வைக்கப்படுவதை உள்ளடக்கும். *தண்டனைத்தீர்ப்பானது* ஒரு குற்றச்செயலுக்கு வழங்கும் தண்டனைக்காக எந்தவித தடுத்துவைத்தலையும் உள்ளடக்கும்.

*குறிப்பு 1:* பிரிவு 5 ஆல் விசா வரையறுக்கப்படுகிறது, ஆனால் ஒரு பாதுகாப்பு விசாவுக்கு வரையறுக்கப்படவில்லை.
*குறிப்பு 2:* பிரிவு (1) அல்லது (2) இன்கீழ் தீர்ப்பின் அறிவிப்புக்காக, பிரிவு 501 G ஐப் பார்க்கவும்.
*குறிப்பு 3:* உபபிரிவு (3) இன் கீழ் முடிவுகளின் அறிவிப்புக்காக, பிரிவு 501C ஐப் பார்க்கவும்.